DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.**

CC. / STC. / MC./ DVC. No :

Miscellaneous : **Crl.M.P. 944 /2024**

**Deposition of PW – 2**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. லோகநாதன் |
| Father's Name | : | திரு. வீராசாமி |
| Village | : | நரசிங்கபுரம், |
| Taluk | : | ஆத்தூர் |
| Calling | : | நடத்துனர் (ஓய்வு) |
| Age | : | 61 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **26.07.2024**

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. சத்தியபிரமாணத்தின்பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.**

துவக்க நேரம் 11.05

1) நான் மேற்கண்ட முகவரியில் வசித்து, நடத்துனராக இருந்து ஓய்வு பெற்றுவிட்டேன். இந்த மனுவை தாக்கல் செய்துள்ள அலமேலு எனது மாமியார் ஆவார்.

2) எனது மனைவியின் பெயர் சத்தியவாணி, எனது மனைவிக்கு நாவலூரில் பட்டா எண் 13 ல் சுமார் 2 1/2 ஏக்கர் சொந்தமாக உள்ளது. இந்த நிலத்தில் எங்களுக்கு தனியாக ரோடு உள்ளது. இந்த ரோட்டை தார் ரோடாக மாற்றுவதற்கு டென்டர் எடுத்திருப்பதாக காண்ட்ரக்டர் பாலமுருகன் என்பவர் நிலத்திடம் வந்து, சொல்லி, ரோடு போடுவதற்காக மண் கொட்டிக்கொண்டிருந்தார்கள்.

3) நாங்கள் உடனே அதை தடுத்தோம். அதன்பிறகு ஆத்தூர் முன்சீப் கோர்ட்டில் ஆத்தூர் தாசில்தாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்த, அது தற்பொழுது நிலுவையில் உள்ளது.

4) கடந்த 20.11.2020 அன்று இரவு சுமார் 07.30 மணிக்கு ரோடு போட வந்தார்கள். அப்பொழுது எனது மாமியார் சிவில் வழக்கு நிலுவையில் உள்ளது என்று சொல்லி தடுத்துள்ளார். அப்பொழுது இருதரப்பிற்கும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. தார் ஊற்றிக்கொண்டிருந்தார்கள். காண்ட்ராக்டர் பாலமுருகன் எனது மாமியாரை பிடித்து தள்ளியதால் எனது மாமியார், சுடான தாரின் மீது விழுந்துள்ளார்.

5) அக்கம், பக்கம் இருந்தவர்கள் வந்து எனது மாமியாரை காப்பாற்றி தேங்காய் எண்ணெய் தடவி எடுத்துள்ளார்கள். எனது மாமியாருக்கு இடுப்பு பகுதியின் பின்பகுதியில் காயம் ஏற்பட்டுள்ளது. இந்த தகவலை எனக்கு அங்கு பக்கத்தில் இருந்தவர்கள் போன் மூலம் சொன்னார்கள். நான் அங்கு சென்று எனது மாமியாரை அழைத்து வந்து ஆத்தூர் GH ல் சிகிச்சையில் சேர்த்தேன். அங்கு 7 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். மேல் சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டார்.

6) ஆன்லைனில் புகார் கொடுத்தோம். வீரகனூர் போலீசார் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை. அதனால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். எனது மாமியாருக்கு காயம் ஏற்பட காரணமாக இருந்த காண்ட்ரக்டர் பாலமுருகன் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

முடிவு நேரம் 11.15

Taken Down by me in Open Court Read over to the dependant in the presence of the petitioner and admitted by the deponant to be correct

Sd/-S. Munusamy B.Sc., B.L.,
Judicial Magistrate No.1,
Attur.